7th April 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM: சிறிது வித்தியாசம் இருக்கிறது.

N.G.Os.

* 43 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government are aware of the protest meetings held on the 19th March 1958 by Non-Gazetted Officers all over the State to press their demands which have already been submitted to the Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

SRI N. K. PALANISAMI : கனம் மந்திரி அவர்கள் ஏற்கனவே இந்த சர்க்காரின் சார்பாக மத்திய சர்க்காருககு இவர்களுடைய குறைபாடுகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு நியாயம் வழங்கவேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். ஆகவே அதன் அடிப்படையில் மறுபடியும் அவர்களுக்கு அதிருப்தியை போக்குவதற்கு ஏதாவது சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதிருப்தியை போக்குவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பது வேறு விஷயம். ஆனால் அதற்காக இம்மாதிரி ப்ரொடெஸ்டு மீடிங் போடுவதால் ஏதாவது பலன் ஏற்படும் என்று நினைப்பது தவறு.

SRI A. GOVINDASAMY : என். ஜி. ஒக்கள் எதிர்க் கட்சியினரின் துணையை இதுவிஷயத்தில் நாடுவதாலும், எதிர்க் கட்சியினர்கள் அவர்களுக்கு பரிந்து பேசுவதாலும், இந்தப் பிரச்னையை சுமுகமாக தீர்த்துவிட முடியாது என்று நிதி அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மையா ? எதிர்க் கட்சியிலுள்ள எம். எல். ஏக்களை என். ஜி. ஒக்கள் அணுகுவதில் என்ன தவறு இருக்கிறது என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதுபற்றி முன்பே இந்தச் சபையில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். இம்மாதிரி இதை ஒரு அரசியல் பிரச்னையாக்குவதால் என். ஜி. ஒக்களுக்கு பாதகம்தான் விளையும். இந்தப் பிரச்னை சுமுகமாக தீருவதற்கு பதிலாக, இன்னும் அது கஷ்டமான பிரச்னையாக முடிந்துவிடும்.

SRI S. LAZAR : மத்திய சர்க்காருக்கு அனுப்பிய யாதாஸ்தின் மீது ஏதாவது பதில் கிடைத்திருக்கிறதா ? ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAN : இன்னும் பதில் கிடைக்க லில்லை.

SRI S. B. ADITYAN : வருகிற மே மாதம் 15-ம் தேதியன்று என். ஜி. ஒக்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு தயார் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்துக்கு தெரியுமா ?

MR. SPEAKER : This is a separate question and does not arise from the main question.

Development of Industries

* 44 *S.N.Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have represented to the Centre to allot any amount to this State

[7th April 1958

from the fund provided for the development of industries in the backward areas in the country?

THE HON. SRI R. VENKATARAMAN : No special allotment for development of Industries in Backward areas has been provided by the Planning Commission and the question does not arise.

Veterinary Doctors

* 45 *S.N.Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any representation was recently received from the students of the Madras Veterinary College demanding enhanced scale of pay of the Veterinary Doctors; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A copy of printed memorandum addressed to Sri V. Ramaiah, Minister for Electricity has been received.

(*b*) In view of the fact that the scales of pay were revised only last year and any further revision will have repercussions on other allied Services the Government rejected the request for enhancement of the scale of pay. It is proposed not to re-open the issue.

* 46 *S.N.Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any memorandum regarding the enhancement in the scales of pay and dearness allowance to the Veterinary Surgeons was presented by the Madras Veterinary Students Forum to the Secertary to Government, Finance Department, when he addressed the Students Forum recently;

(*b*) whether a copy of the above memorandum will be laid on the Table of the House;

(*c*) whether any, and if so, what action has been taken thereon; and

(*d*)if no action has been taken, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir. No Memorandum was received by Secretary, Finance Department. Nor did he address the students Forum.

(*b*), (*c*) & (*d*) The questions do not arise.

SRI N. K. PALANISAMI : மெடிகல் காலேஜ் மாணவர்கள் எவ்வளவு வருஷ காலம் படிக்கிறார்களோ, அவ்வளவு வருஷ காலம் இவர்களும் படிக்கிறார்கள். இவர்களுடைய சம்பளத்தை கொஞ்சமாவது உயர்த்துவதற்கு சர்க்கார் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவர்களோடு மெடிகல் காலேஜ் கிராஜுவெட்களை ஒப்பிடலாம். அக்ரிகல்சரல் கிராஜுவேட்களையும் ஒப்பிடலாம். அப்படி ஒப்பிட்டுப்பார்த்தால் இப்பொழுது சமீபத்தில் இவர்களுக்கு உயர்த்தப்பட்ட சம்பளம்கூட இதற்கு குறைவாகத் தான் இருக்கிறது.